# 11 குருத்துவம்



படம் 11-1 - குருத்துவ வார்த்தைப்பாடு அளித்தல்



படம் 11.2 - முகங்குப்புற விழுந்து செபித்தல்



படம் 11-3 - தலையில் கை வைத்துச் செபித்தல்



படம் 11.4 - அர்ப்பண செபம்



படம் 11.5 - திருப்பலி உடை அணிவித்தல்



படம் 11.6 - கிறிஸ்மா தைலத்தால் கைகளை அருட்பொழிவு செய்தல்



படம் 11.7 - அப்பத்துடன் கிண்ணமும் இரசத்துடன் கலமும் அளித்தல்

மேல் காணும் படங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள். குருத்துவ அருளடையாளங்களை வழங்கும் சடங்கின் முக்கிய நிகழ்வுகள் இவற்றில் காட்டப்படுகின்றன. குருத்துவத்தை அளிப்பவர் ஆயர் ஆவார். அவர் திருத்தொண்டரின் தலை மேல் கைகளை வைத்துச் செபித்து குருத்துவத்தை அளிப்பார்.

குருத்துவம் இறைதந்தையிடமிருந்து கிடைக்கும் மேலான அழைப்பா கும். கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களுக்கு உலகின் இறுதிவரை செயற்படும்படி மறைபரப்புப் பணியினை அளித்தார். இப்பணியினை இடைவிடாது



இலவச விநியோகத்திற்காக

முன்னெடுத்துச் செல்வது குருத்துவம் என்னும் அருளடையாளமாகும். பெரிய வியாழனன்று இறுதி இராவுணவின்போது கிறிஸ்துவினால் இவ்வருளடையாளம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் பெரிய வியாழன், அருட்பணியாளர்களின் திருநாள் எனக் கணிக்கப்படுகின்றது. அன்றைய தினம் இறைமக்கள் அவர்களுக்காகச் செபிக்க அழைக்கப்படுகின்றனர். குருத்துவமானது ஆன்மாவிலே அழியாத முத்திரையைப் பதிக்கின்றது. இது வாழ்வில் ஒரேயொரு முறை மட்டும் பெறக்கூடிய அருளடையாளமாகும். இவ்வருளடையாளத்தைப் பெற்ற அருட்பணியாளர்கள் இறைவனுக்கும் இறைமக்களுக்குமிடையே நடுநிலையாளராகப் பணியாற்றுகின்றார்கள். குருத்துவத்திலே மூன்று நிலைகள் உண்டு. அவை :- திருத்தொண்டர், அருட்பணியாளர், (குருவானவர்) ஆயர் ஆகிய நிலைகளாகும். அந்நிலையினரின் பொறுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

### திருத்தொண்டரின் பொறுப்புகள்



படம் 11.8 - திருத்தொண்டர்

- ஆயர்கள், குருக்களுக்கு வழிபாடுகளில் துணை புரிதல்.
- திருப்பலியின்போது நற்செய்தி வாசித்தல், மறையுரை ஆற்றுதல்.
- சடங்கிற்கேற்ப திருமுழுக்கு அளித்தல்.
- நற்கருணை ஆசீர்வாதம் அளித்தல்.
- திருமணச் சடங்கை நிறைவேற்றுதல்.
- இறந்தோர் சடங்கை நிறைவேற்றுதல்.

### அருட்பணியாளர்களின் பொறுப்புகள்

- திருப்பலி நிறைவேற்றுதல்.
- நற்செய்தியைப் போதித்தல்.
- உண்மையான மேய்ப்பனாகப் பங்கை நிருவகித்தல்.



படம் 11.9 - அருட் பணியாளர்

- அருளடையாளங்களை வழங்குதல். (குருத்துவம் தவிர )
- பங்கில் முதன்மை மறையாசிரியராகப் பணியாற்றுதல்.
- பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆசீர்வாதம் வழங்குதல்.

### ஆயரின் பொறுப்புகள்



படம் 11.10 ஆயர்

- மறைமாவட்டத்தை நிருவகித்தல்
- இறைமக்களுக்கு அறிவூட்டுதல்.
- இறைமக்களைத் தூய்மைப்படுத்தல்
- இறைமக்களின் நம்பிக்கையைப் பாதுகாத்தல்.
- திருவழிபாடு நடாத்துதல்.
- அருளடையாளங்களை அளித்தல்.

கத்தோலிக்க அருட்பணியாளர்களை இரு பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

**அருட்பணியாளர்கள்**

**மறைமாவட்ட அருட் பணியாளர்கள்**

ஆயரின் கீழ் தமது மறை மாவட்டத்தில் பணியாற்றுபவர்கள்

**துறவற அருட்பணியாளர்கள்**

துறவற சபையின் பிராந்தியத் தலைமைக்குருவின் கீழ் தமது துறவற சபையின் நிறுவுனரின் இறைத் தூண்டலுக்கேற்ப பணியாற்றுபவர்கள்.

## அருட்பணியாளரின் வாக்குறுதியும் வார்த்தைப்பாடும்

அருட்பணியாளர்கள் வாக்குறுதி அல்லது வார்த்தைப்பாடு அளிக்க வேண்டும்.

- மறைமாவட்ட அருட்பணியாளர்கள் (இரண்டு) வாக்குறுதிகள் அளிக்கிறார்கள். அவை,

| | | |
|---|---|---|
| 1. கீழ்ப்படிவு | - | மறைமாவட்ட ஆயருக்குக் கீழ்ப்படிதல் |
| 2. மணத் துறவு | - | திருமணம் செய்யாது விண்ணரசுக்காக தம்மை அர்ப்பணித்தல். |

துறவற சபை அருட்பணியாளர்கள் மூன்று வார்த்தைப்பாடுகளை அளிக் கிறார்கள். அவை,

| | | |
|---|---|---|
| 1. கீழ்ப்படிவு | - | தமது துறவற சபையின் மேலாளருக்குத் தலை மை அருட்பணியாளருக்குக் கீழ்ப்படிதல். |
| 2. மணத்துறப்பு | - | திருமணம் செய்யாது கற்பு வாழ்வின் மூலம் விண்ணரசுக்காகத் தம்மை அர்ப்பணித்தல். உதாரணம் : விண்ணகத்திற்காக உலக சொத்துக்கள், உரிமையை துறப்பதன் மூலம் அவற்றைப் பொதுவாகக் கொண்டு இறைப் பணியாற்றுதல். |
| 3. ஏழ்மை | - | வங்கிக் கணக்கு, வாகனங்கள், நிலபுலன்கள் ஆகியவற்றைத் தனக்கென சொந்தமாக வைத்துக் கொள்ளாமை. |

விண்ணரசை நோக்கி எம்மைக் கொண்டு செல்வதற்காகத் தமது வாழ்வை அர்ப்பணித்துள்ள எமது அருட்பணியாளர்கள் மட்டில் எமக்கும் சில கடமைகள் உள்ளன. அவற்றிற் சில :-

- அவர்களுக்காகச் செபித்தல்.
- திருவழிபாட்டுப் பணிகளில் உதவி புரிதல்.
- திருச்சபையின் கட்டளையான, ''திருச்சபையின் பராமரிப்பிற்காகக் காணிக்கை செலுத்துதல்'' என்பதற்கேற்ப இயலுமானவரை ஞான மேய்ப்பர்களுக்கு (அருட்பணியாளர்களுக்கு) உதவுதல்.
- விண்ணரசைப் பரப்பும் பணிகளில் துணை புரிதல்.

## செயற்பாடு

1. திருத்தொண்டர், அருட்பணியாளர், ஆயர் ஆகிய மூன்று நிலைகளிலும் உள்ளவர்களில் ஒவ்வொருவரினதும் பணிகள் மூன்றினை வெவ்வேறாக அட்டவணைப்படுத்துக.
2. மறைமாவட்ட/ துறவற சபை அருட்பணியாளர்கள் என்பவர்களுக்கு இடையிலுள்ள வேறுபாடு ஒன்றை எழுதுக.
3. அருட்பணியாளருக்காகச் செபம் ஒன்று எழுதுக.
4. உங்கள் பங்கு அருட்பணியாளர் பற்றிய விபரங்களைச் சேகரித்து அவற்றை முன்வைக்குக.
5. அருட்பணியாளர்கள் மட்டில் கடமைகள் இரண்டை எழுதுக.
6. அருட்பணியாளர்களின் சேவையைப் பாராட்டி கவிதை ஒன்று எழுதுக
7. துறவற சபை அருட்பணியாளர்கள் அளிக்கும் வார்த்தைப் பாடுகள் மூன்றையும் எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

E [PÐUPõP¨ £o ¯õØÖ®
A¸m£o ¯õÍºPÐUPõPz vÚ•®
ö\¤² [PÒ.